# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal procedure)
## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
## RANIPET, VELLORE DISTRICT.
## Case No. OS.116/2009 CW-1

பெயர் :-விஜயசேகர்

த/பெ :- கேசவன் தொழில் :- துணைவட்டாட்சியர்

கிராமம் :-வாலாஜா வயது :- 42

தாலுக்கா :-வாலாஜா

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of Date 18.11.2021.** சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது.

**.நீ.ம.சா.1 முதல் விசாரணை**.

நீதிமன்றத்தில் இருந்து வந்த அழைப்பாணை பெயரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். காரை கிராம துறை எண் 42/2பி சிட்டா, அ பதிவேடு, அடங்கல், புலவரைபடம் ஆவணங்கள் கொண்டுவந்துள்ளேன். மேற்கண்ட வருவாய் ஆவணங்கள் காரை கிராம துறை எண் 42/2பி விஸ்வநாத பண்டாரம், சிவலிங்க பண்டாரம் 1984த்திய அ பதிவேடு படி ஆகியோர் பெயரில் உள்ளது. அதற்கான பட்டா எண் 575 மேற்படி துறை எண்ணின் பரப்பளவு 39.5ஏர்ஸ் இதன் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். மேற்படி அ பதிவேடு அது நீ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி துறை எண் காரை கிராம துறை எண் 42/2பிக்குண்டான சிட்டா வேலாயுதம் மகன் விஸ்நாதன் (எ) அண்ணாமலை மேலும் 10 பெயர்களில் உள்ளது. அவர்கள் 1.தாமோதரன் மனைவி பட்டாம்மாள் 2. வேலாயுதம் மகன் கணேசன் 3. வேலாயுதம் மகன் கந்தசாமி 4. சிவலிங்கம் மனைவி காமாட்சியம்மாள், 5. கோபால் மனைவி இன்பவள்ளி , 6. முனுசாமி மனைவி ராஜேஸ்வரி, 8. சிவலிங்கம் பண்டாரம் மகன் பாஸ்கரன், 9. சேகர் மனைவி மரகதம் ,10. பாபு மனைவி திலகவதி, 11.கிருபாணந்தன் மனைவி சரஸ்வதி ஆகும். மேற்படி சிட்டா நகல்கள் 2012ம் வருடத்திற்கு ஆனது. மேற்படி ஆவணத்தின் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். மேற்படி சிட்டா நகல் நீ.ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி காரை கிராம துறை எண் 42/2பிக்குண்டான அடங்கல் பதிவேடு விஸ்வநாத பண்டாரம் விஸ்வநாதன் (எ) அண்ணாமலை பெயரில் உள்ளது மேற்படி நகலை நீதிமன்றத்தில் தாக்கல்

செய்கிறேன். அது நீ.ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. காரை கிராம துறை எண் 42/2பிக்குண்டான புலவரைபடம் நகலை தாக்கல் செய்கிறேன். அது நீ.ம.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வருவாய் ஆவணங்கள் படி மேற்படி காரை கிராம துறை எண் 42/2பி -க்குண்டானது விஸ்வநாத பண்டாரம் மற்றும் சிவலிங்க பண்டாரம் மற்றும் 9 பெயர்களில் உள்ளது.

**17 முதல் 20 வரையுள்ள பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்நீதிமன்றத்தில் இருந்து தாசில்தாருக்கு அழைப்பாணை வந்தது அவரின் வாய்மொழி உத்தரவின் படி நான் இந்நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நீம.சா.ஆ.1 ஆவணம் 1984ம் வருடத்தின் ஆவணம் ஆகும் அதே ஆவணம் 2021க்கும் பொருந்தும். அடங்கல் ஆவணம் என்பது சொத்தை யார் அனுபவிப்பவர்கள் என்பது குறித்து தெரிவிக்கும் ஆவணம் ஆகும். தாவா இடத்திற்கு நான் சென்றதில்லை. கடந்த 10 மாதங்களாக வாலாஜா தாலுக்கா அலுவலகத்தில் துணை வட்டாட்சியராக பணிபுரிந்துவருகிறேன். நான் ஆவணங்கள் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். தாவா இடம் மற்றும் அதனை சுற்றியுள்ள இடமும் சிப்காட் நிர்வாகத்தால் கையகப்படுத்தப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது. வழக்கின் வாதிகள் சிப்காட் நிறுவனத்தின் மூலமாக நில இழப்பீட்டு தொகையை பெற்றுக்கொண்டார்களா என்ற விவரம் எனக்கு தெரியாது. தாவா இடத்திற்கு பக்கத்தில் ஏரி கால்வாய் உள்ளதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. கிராம நிர்வாக அதிகாரியை விசாரணை செய்ததின் பெயரில் வழக்கின் பிரதிவாதிகள் சுமார் 25 ஆண்டுகளாக தாவா இடத்திற்கு பக்கத்தில் உள்ள ஏரி கால்வாய்க்கு அருகில் வசித்துவருகிறார்கள் என்றால் சரிதான் கிராம நிர்வாக அலுவலரின் விசாரணை அடிப்படையில் எனக்கு அது தெரியவந்தது எந்த எந்த பிரதிவாதிகள் என குறிப்பிட்டு பெயர் தெரியவில்லை. அடங்கலில் வாதியின் பெயர் தவறாக சேர்க்கப்பட்டுள்ளது என்றால் பட்டாதாரரின் பெயர் தான் வரும். நீங்கள் சொல்வது தவறு என்றும் அடங்கல் ஆவணத்தின் பட்டாதாரரின் பெயர் வரவேண்டும் என்ற அவசியம் கிடையாது யார் நிலத்தில் அனுபவம் செய்துவருகிறார்களோ அவர்கள் பெயரில் தான் வரும் என்றால் சரியல்ல தவறு. வாதிகளுக்கு

வழக்கு தாக்கல் செய்ய எந்த வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

**பிரதிவாதிகள் 1,4,6,8 முதல் 13 வரையுள்ளவர்கள் தரப்பில்**

**குறுக்கு விசாரணை**.

நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்த பிறகு நான் வழக்கு இடம் சொல்லி அளவீடுகள் எதுவும் செய்யவில்லை. சம்மந்தப்பட்ட புலஎண்ணின் ஆவணங்கள் அடிப்படையிலும் சம்மந்தப்பட்ட கிராமத்தின் கிராம நிர்வாக அலுவலர் அவர்களின் விசாரணையின் அடிப்படையிலும் சாட்சி சொல்கிறேன் என்றால் சரிதான். சர்வே எண் காரை கிராம எல்லைக்குள் தான் உள்ளது ராணிப்பேட்டை நகர எல்லைக்குள் உள்ளதா என்றால் இல்லை. பட்டாதாரர் 42/2பி சர்வே எண்ணில் வசித்துவருகிறார்களா என்று உங்கள் விசாரணையில் தெரியவருகிறதா என்றால் விசாரணை செய்யவில்லை. தாவா சொத்தில் சுமார் 25 ஆண்டுகளுக்கு மேலாக இந்த வழக்கின் பிரதிவாதிகள் வசித்துவருகிறார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கில் உள்ள பிரதிவாதிகள் அனைவரும் ரேசன் கார்டு, வாக்காளர் அட்டை, மின்சார கட்டண அட்டை ஆகியவற்றை வைத்துக்கொண்டு வழக்கு சொத்தில் அனுபவம் செய்துவருகிறார் என்றால் சரிதான் கிராம நிர்வாக அலுவலரின் விசாரணை அடிப்படையில் எனக்கு தெரியவருகிறது. வாதியின் பெயர் ஆவணத்தில் 2012ல் இருந்து தான் வாதி பெயரில் பட்டா வருகிறது என்றால் சரிதான். தாவா சொத்தை சிப்காட் நிறுவனம் கையகப்படுத்தியிருக்கிறதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சிப்காட் நிறுவனத்தார் தாவா சொத்திலும் மற்ற இடத்திலும் எவ்வளவு இடம் எடுத்து மேற்கொண்டார்கள் என்றால் அவர்களுக்கு தான் தெரியும். இந்த வழக்கு வாதிகள் 2009ம் ஆண்டிலேயே வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். தற்போது நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும் சிட்டா பதிவேடு 2012ல் தான் உள்ளது என்றால் சரிதான். வாதிகள் சிட்டாவில் உள்ள நபர்கள் தாவா இடத்தில் வசிக்கவில்லை என்றும் புளியங்கண்ணு கிராமத்தில் வசித்துவருகிறார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வருவாய் துறை பதிவேடுகளான அ பதிவேடு, சிட்டா, அடங்கல் போன்றவைகள் நடைமுறையில் உள்ளது இல்லை என்று சொன்னால்

நடைமுறையில் உள்ளது தான். தாவா சர்வே எண் வாதிகளுக்கு சொந்தமானது இல்லை என்றும் அந்த இடத்தில் பிரதிவாதிகள் தான் வசித்துவருகிறார்கள் என்றும் உங்கள் ஆவணம் நடைமுறைக்கு உகந்தது இல்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்யப்பட்டுள்ள வருவாய் துறை ஆவணங்கள் 2012ல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தில் பிரதிவாதிகள் வசிப்பதாகவும் வாதி அந்த இடத்தில் இல்லை என்றாலும் சரியல்ல. நீங்கள் ஆவணங்கள் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரிதான். சம்மந்தப்பட்ட தாவா சொத்து வாதிகளுக்கு சொந்தமானது கிடையாது சிப்காட் நிறுவனம் நிலகையகப்படுத்தியது என்றால் ஆவணங்கள் அடிப்படையில் அதுவரவில்லை.

## 14 முதல் 16 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

பிரதிவாதிகள் 17 முதல் 20 வரை உள்ள குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்கள்.